# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2021 சனவரி

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் வினாத்தாளானது 9 கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது.

**பகுதி A** ஆனது ஒவ்வொன்றும் 5 புள்ளிகளைக் கொண்ட 4 வினாக்களை உள்ளடக்கியுள்ளதுடன் **பகுதி B** ஆனது ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 3 வினாக்களையும் **பகுதி C** ஆனது ஒவ்வொன்றும் 25 புள்ளிகளைக் கொண்ட 2 வினாக்களையும் உள்ளடக்கியுள்ளது.

அதிகளவான பரீட்சார்த்திகள் வழங்கப்பட்ட நேரத்தினுள் சகல 9 வினாக்களுக்கும் விடையளித் திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்வினாத்தாளுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.

### பகுதி A

**வினா இல. 01**

இவ்வினா வணிகச் சூழல் தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. மேலும், இவ்வினா கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக வெளிவாரிச் சூழலில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவில் கேட்கப்பட்டதை நன்றாகப் புரிந்துகொண்டு, சிறப்பாக விடையளித்திருந்தனர்.

இந்த வகையான வினாக்களுக்கு வெற்றிகரமாக விடை அளிப்பதற்கு பரீட்சார்த்திகள் பின்வரும் பாடப் பரப்புகளில் அறிவைக் கொண்டிருக்க வேண்டுமெனப் பரிந்துரைக்கப்படுகிறது:

- வணிகச் சூழலை இனங்காணுதல் (உள்ளகச் சூழல், வெளிவாரிச் சூழல்)
- வெளிவாரிச் சூழலின் படைகள் / சக்திகள் (பொருளாதார, சட்ட, தொழினுட்ப, சமூக)
- சூழற் படைகளின் காரணிகள் (உதாரணம்: பொருளாதாரப் படைக்கானது – பரிமாற்ற வீதங்கள், வட்டி வீதங்கள், வரிவிதிப்பு)
- அண்மைய உள்நாட்டு மற்றும் பூகோள விடயங்கள் மீதான அறிவு.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.***

**வினா இல. 02**

வினாவின் **பகுதி (a)** ஆனது இடர் தவிர்ப்பு என்பதன் கருத்தை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. சில பரீட்சார்த்திகளால் அதன் கருத்தைத் துல்லியமாக விபரிக்க முடிந்திருந்தது. எவ்வாறாயினும், சம்பந்தமற்ற விடைகளும் அளிக்கப்பட்டிருந்தன. உதாரணமாக, இடர் தவிர்ப்பு பற்றி விபரித்திருந்த பரீட்சார்த்திகள் கணக்காய்வு இடரைத் தவிர்ப்பது பற்றி விபரித்திருந்தனர்.

வினாவின் **பகுதி (b)** ஆனது இடர் குறைப்புக்குப் பயன்படுத்தப்படுகின்ற இரண்டு தந்திரோபாயங்களை இனங்காணுமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. ஒரு சில பரீட்சார்த்திகள் இடர் குறைப்புத் தந்திரோபாயங்களைக் குறிப்பிட்டு முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுதல், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுதல், நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் போன்ற சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.***

## வினா இல. 03

வினாவின் **பகுதி (a)** ஆனது உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் ஒன்றை ஏற்றுக்கொண்டு முகாமை செய்யும்போதான மூன்று பிரதான அம்சங்களையும் தேவைப்பாடுகளையும் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. சில பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு சரியான விடை அளிக்க முடிந்திருந்தது. கணிசமானளவு பரீட்சார்த்திகள் கடந்த ஆண்டுக்குரிய கணக்காய்வு அறிக்கையைப் பரிசோதித்தல், கம்பனி மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பு, பங்குதாரர்களின் கூட்டமைவு போன்ற தவறான விடைகளை அளித்திருந்தனர்.

வினாவின் **பகுதி (b)** ஆனது உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் ஒன்றின் இரண்டு மூலகங்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலொன்றில் ஐந்து மூலகங்கள் இருப்பதுடன் அந்த மூலகங்கள் தெளிவான விபரிப்புகளுடன் பாடப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மோசமாக இருந்ததுடன் அவர்கள் தொழில்சார் தீர்மானம், நன்நெறிக் கோவை, நியாயத்தன்மை போன்ற சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை.***

## வினா இல. 04

வினாவின் **பகுதி (a)** ஆனது தனித்தனியான கணக்காய்வு ஈடுபடுத்தலொன்றின் தரக் கட்டுப்பாட்டில் கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு கொள்கைகளை இனங்காணுமாறு கேட்டிருந்தது. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடை அளித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மேலும், சில பரீட்சார்த்திகள் கீழேயுள்ளவை போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்:

- நன்நெறியைப் பின்பற்ற வேண்டும்.
- தொழில்சார் நியமங்களைப் பின்பற்றுதல்.
- சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள்.

வினாவின் **பகுதி (b)** ஆனது சேவை நாடுநர் ஒருவரின் நேர்மை குறித்து தரக் கட்டுப்பாடுகள் முறைமை ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய மூன்று விடயங்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் தொழில்சார் சந்தேகம், மனித வளங்கள், கண்காணிப்பு போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை.***

# பகுதி B

## வினா இல. 05

வினாவின் **பகுதி (a)** ஆனது கணக்கீட்டுக் கோட்பாடுகளின் பிரயோகம், பொருண்மை அடிப்படையிலான கணக்காய்வு அபிப்பிராயத்தில் அது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பன பற்றிப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளால் வினாவில் தரப்பட்ட கணக்கீட்டு வழுக்களை விளங்கிக்கொள்ள முடியாதிருந்த காரணத்தால் அவர்களால் கணக்காய்வு அபிப்பிராயம் மீதான தாக்கத்தை விபரிக்க முடியவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட பொருண்மை மட்டத்தின் அடிப்படையில், கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு தனித்தனியான கணக்கீட்டு வழுக்களின் தாக்கத்தை விபரிக்காது LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம், LKAS 2 – தொக்கு ஆகியவற்றிற்கு இணங்க சகல வழுக்களும் சீராக்கம் செய்யப்பட வேண்டுமென விடை அளித்திருந்தனர்.

இந்த வகையான வினாக்களுக்கு விடையளிக்கும்போது, பரீட்சார்த்திகள் பொருண்மை அடிப்படையில் தனித்தனியான உருப்படிகளின் தாக்கத்தை குறிப்பிட வேண்டும். அதன் பின்னர், நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்ய முகாமை மறுக்கும்போது கணக்காய்வாளர் அறிக்கையில் அதன் தாக்கங்கள் பொருண்மை மட்டத்தை விஞ்சுமாயின் ஒட்டுமொத்தத் தாக்கத்தையும் கருத்திற் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

வினாவின் **பகுதி (b)** ஆனது கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தைத் தவிர, கணக்காய்வாளரின் அறிக்கையில் உள்ளடக்கப்படும் மூன்று மூலகங்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியான விடை அளித்திருந்ததை அவதானிக்க முடிந்திருந்தது.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.***

## வினா இல. 06

வினாவின் **பகுதி (A)** ஆனது கம்பனி ஒன்றின் கணக்காய்வை ஏற்றுக் கொள்வதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னர் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை மதிப்பிடுமாறு கேட்டிருந்தது. பாடப் புத்தகத்தைப் படித்திருந்து பரீட்சார்த்திகள் விவரணத்தின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டிருந்ததுடன் அவர்களால் சரியான விடையையும் அளிக்க முடிந்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், விடையளிக்கும்போது வினாவில் தரப்பட்ட விடயங்களைப் பிரயோகிப்பதற்குத் தவறிய பரீட்சார்த்திகளையும் காணக்கூடியதாக இருந்தது.

வினாவின் **பகுதி (B)** ஆனது சுயாதீனத்திற்கான சாத்தியமான அச்சுறுத்தல்களாக ஏற்பிசைவு செய்யப்படக்கூடிய சூழ்நிலைகள் / உறவுமுறைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவைப் பிழையாக விளங்கி, சரியான விடை அளிக்கத் தவறியிருந்ததை அவதானிக்க முடிந்தது. மேலும், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சுயாதீனத் திற்கான அச்சுறுத்தல்களை இணக்கப்பாட்டிற்கான அச்சுறுத்தல் மற்றும் தொழில்சார் ஒழுக்கநெறிக் கோட்பாடுகளுடன் குழப்பியிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.***

## வினா இல. 07

வினாவின் **பகுதி (A) (a)** ஆனது கணக்காய்வாளரால் பின்பற்றப்பட்ட வெளிவாரி உறுதிப்படுத்தல் செயன்முறையில் உள்ள பலவீனங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. எதிர்மறை உறுதிப்படுத்தலில் உள்ள பலவீனங்களுடன் தொடர்புடைய தகவல்கள் வினாவிலேயே தரப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியான விடை அளிக்கத் தவறியிருந்தனர்.

வினாவின் **பகுதி (A) (b)** ஆனது கணக்காய்வாளர் உறுதிப்படுத்தல் கோரிக்கைகளை அனுப்புவதற்கான அனுமதி முகாமையால் மறுக்கப்படும்போது கணக்காய்வாளர் மேற்கொள்ளக்கூடிய இரண்டு நடவடிக்கைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலானவர்களால் வினாவை விளங்கிக் கொள்ள முடியாதிருந்ததுடன், கடந்த வருட கணக்காய்வு வேலைத் தாள்களைப் பரிசோதித்தல், நிபுணரிடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்ளல், கடந்த ஆண்டின் நியதிச் சட்டக் கணக்காய்வாளர் மற்றும் கணக்காய்வாளர்களிடம் விசாரித்தல் போன்ற தவறான விடைகளை அளித்திருந்தனர்.

வினாவின் **பகுதி (B)** ஆனது கணக்காய்வாளர் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு ஒன்றிலுள்ள அடுத்தடுத்த நிகழ்வுகள் பற்றி ஆற்ற வேண்டிய நான்கு விசாரணைகளை இனங்காணுமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. கணக்காய்வாளரால் அடுத்தடுத்த நிகழ்வுகள் பற்றி பல்வேறு வகையான விசாரணைகளை முன்னெடுக்க முடியும் என்பதுடன் பாடப் புத்தகத்தில்கூட பல விசாரணைகள் விபரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளால் சம்பந்தப்பட்ட விசாரணைகளை இனங்காண முடியாதிருந்ததுடன், சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் தொடர்பாக விசாரணை செய்தல், உள்ளகக் கட்டுப்பாடுகள் பற்றி விசாரணை செய்தல் போன்ற பொதுவான விடைகளை அளித்திருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.***

## பகுதி C

### வினா இல. 08

இவ்வினா 2 பகுதிகளைக் கொண்டது. பகுதி (A) ஆனது (a), (b), (c), (d) என 4 உப பகுதிகளையும் பகுதி (B) ஆனது (a), (b), (c) என 3 உப பகுதிகளையும் கொண்டிருந்தன. ஒட்டுமொத்தத்தில், இவ்வினாவானது தரப்பட்ட விடய ஆய்வை அடிப்படையாகக் கொண்ட வணிகச் செயன்முறைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள், கட்டுப்பாட்டுச் சூழல் மற்றும் IT கட்டுப்பாடுகள் ஆகிய எண்ணக்கருக்களை பரீட்சார்த்திகள் விளங்கிக் கொள்ளும் ஆற்றலைப் பரீட்சித்திருந்தது.

**பகுதி (A)**

**(a)**

வினாவின் இப்பகுதியானது, விவரணத்தில் தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கம்பனியில் காணப்படும் மூன்று உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை அடையாளங் காணுமாறு கேட்டிருந்தது. அத்தகைய எல்லா பலவீனங்களும் தரப்பட்ட விவரணத்தில் எடுத்துக்கூறப்பட்டிருந்ததால் விடையை அவ்விவரணத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளால் எதிர்பார்க்கப்பட்ட விடையை வழங்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், கணக்கீட்டு முறைமை காணப்படாமை, தொக்கு முறைமை காணப்படாமை போன்ற சில சம்பந்தமற்ற விடைகள் சிலவும் அளிக்கப்பட்டிருந்தன.

**(b)**

இப்பகுதியானது, விவரணத்தில் தரப்பட்ட கம்பனிக்கு ஏற்புடையதான தொடர்புடைய உதாரணங்களுடன் செயற்பாடு, நிதி மற்றும் இணக்கக் கட்டுப்பாடுகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இதற்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாகக் விளங்கிக்கொள்ளவில்லை. மேலும், சில பரீட்சார்த்திகள் மேலே பகுதி **(a)** இல் தரப்பட்ட விடையைத் திரும்பவும் எழுதியிருந்தனர். இன்னும் சில பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட கட்டுப்பாடுகளை விபரித்திருந்தனர் ஆயினும் **BIO** இற்கு ஏற்புடைய உதாரணங்களை வழங்கியிருக்கவில்லை.

**(c)**

இவ்வினா விவரணத்தில் கூறப்பட்ட கம்பனிக்குப் பொருத்தமான நான்கு பிரதான வணிகச் செயன்முறைகளைப் பட்டியலிடுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளால் தொடர்புடைய செயன்முறைகளைத் துல்லியமாக வழங்குவதற்கு முடிந்திருந்தது. எவ்வாறாயினும், பெறுகை, காசு முகாமை, பட்டியலிடல், தொக்கு முகாமை போன்ற செயன்முறைகளைத் தவிர்த்து செயற்பாடு, முகாமை, IT மற்றும் முகாமைச் செயன்முறைகள் போன்ற வணிகத்துடன் தொடர்பில்லாத செயன்முறைகளை எழுதியிருந்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

**(d)**

இவ்வினா IT பொதுக் கட்டுப்பாடுகள் மற்றும் IT பிரயோகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை வேறுபடுத்துமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. சில பரீட்சார்த்திகளால் இந்த இரண்டு கட்டுப்பாடுகளையும் வேறுபடுத்த முடியாமற் போயிருந்தது. மேலும், பொது மற்றும் பிரயோகக் கட்டுப்பாடுகளை வேறுபடுத்தாது பொது மற்றும் பிரயோகக் கட்டுப்பாடுகளுக்கான உதாரணங்களை வழங்கியிருந்த பரீட்சார்த்திகளையும் காணக்கூடியதாக இருந்தது.

## பகுதி (B)

**(a)**

இவ்வினா உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பில் கூறப்பட்ட கூற்றின் செல்லுபடித்தன்மை பற்றி ஆராயுமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. இந்தக் கூற்றானது சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினால் மோசடிகள் மற்றும் வழுக்களை நீக்கிக்கொள்ளலாம் என்ற விடயத்தைக் கொண்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இக்கூற்று தவறானது எனக் குறிப்பிட்டிருந்ததுடன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் உள்ளார்ந்த வரையறைகளையும் வழங்கியிருந்தனர்.

**(b)**

இவ்வினா உள்ளகக் கட்டுப்பாட்டின் கருத்தை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. பல பரீட்சார்த்திகளால் எதிர்பார்க்கப்பட்ட விடையை அளிக்கக்கூடியதாக இருந்ததை காணக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், பாட விடயத்தை விளங்கிக்கொள்ளாது வியாபாரத்தின் தரக் கட்டுப்பாடு, கணக்காய்வு, செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள், நிதிக் கட்டுப்பாடுகள், இணக்கக் கட்டுப்பாடுகள் போன்ற வேறு கட்டுப்பாடுகளையும் சிலர் விபரித்திருந்தனர்.

**(c)**

இவ்வினா COSO இன் படி, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் இரண்டு ஆக்கக்கூறுகளை குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்த அதே வேளை சில பரீட்சார்த்திகள் கீழேயுள்ளவை போன்ற சில சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்தனர்:

- கடமைகளின் பிரிப்பு
- பௌதிகக் கட்டுப்பாடுகள்
- தரக் கட்டுப்பாடுகள்
- நன்நெறித் தேவைப்பாடுகள்

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.***

## வினா இல. 09

இந்த வினா 2 பகுதிகளைக் கொண்டது. பகுதி (A) ஆனது (a), (b), (c), (d), (e) என 5 உப பிரிவு களைக் கொண்டிருந்ததுடன் பகுதி (B) ஆனது (a), (b) என 2 பகுதிகளைக் கொண்டிருந்தது.

**பகுதி (A)**

**(a)**

இந்தப் பகுதியானது தரப்பட்ட விவரணத்தின் அடிப்படையில் விசேட கவனம் தேவைப்படுகின்ற பகுதிகளை இனங்காண்பதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றலைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளால் கணக்காய்வு நோக்கிலமைந்த விடைகளை அளிக்க முடியாதிருந்தது. அவர்கள் பொதுவான விடைகளை எழுதியிருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள் கீழ்வருவன போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்:

- கடந்த ஆண்டின் ஈடுபடுத்தல் கடிதத்தைப் பயன்படுத்துதல்
- CEO இன் செயலாற்றுகை / CEO இன் ஆட்சேர்ப்பு.
- உற்பத்திப் பொறியின் வினைத்திறன்.
- பதிவுகளின் பூரணத்தன்மை

**(b)**

இவ்வினா ஈடுபடுத்தல் கடிதத்தின் மீளாய்வுக்கான நிபந்தனை மீதான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் ஈடுபடுத்தல் கடிதத்தின் கட்டுறுப்புகளை திருத்து வதற்கு கணக்காய்வாளரால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நிபந்தனைகளை எழுதுவதற்குப் பதிலாக ஈடுபடுத்தல் கடிதத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை எழுதியிருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள் கீழ்வருவன போன்ற சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர்:

- கணக்காய்வுக் கட்டணம்
- ஈடுபடுத்தல் கடிதத்தின் பொறுப்புகள்
- சேவை நாடுநரின் அறிக்கை

**(c)**

இந்த வினா திட்டமிடலின் தொழில்சார் தீர்மானம் மற்றும் கணக்காய்வொன்றை ஆற்றுதல் ஆகியன பற்றிய பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியான அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவுக்கு முற்றிலும் சம்பந்தமில்லாத வினாவிலிருந்து இனங்கண்ட பகுதிகளைக் குறிப்பிட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. உதாரணமாக, மிகையூதியம், விற்பனை வருவாய், CEO செயலாற்றுகை போன்றவை.

**(d)**

இந்த வினா, தரப்பட்ட விவரணத்தின் அடிப்படையில் கணிசமான இடர் என்னும் பதத்தை விபரிப்பதில் பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. பல பரீட்சார்த்திகள் பிரதான இடர் பகுதிகளை இனங்காணத் தவறியிருந்ததுடன் மோசடி இடர் ஒன்றாக மிகைப்படுத்திக் காட்டப்பட்ட விற்பனையைக் காட்டியிருந்தனர் ஆனால், விசேட கவனம் தேவைப்படுகின்ற கணிசமான இடர் என்பதை விபரிக்கத் தவறியிருந்ததுடன் இறுதியாக மோசடி இடர் என்பது இடர் ஒன்று கணிசமானளவாக இருப்பதைக் குறிக்கின்ற ஒரு காரணியாகும் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**(e)**

இந்த வினா விற்பனைக்கான கணக்காய்வு நடைமுறையை பிரயோகிப்பதில் பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. பல பரீட்சார்த்திகள் விற்பனை மீது அதிக கவனத்தைச் செலுத்தாது கடன்பட்டோர் மீதிகளின் சரிபார்ப்பைக் குறிப்பிட்டிருந்தனர். மேலும், பல பரீட்சார்த்திகள் கீழ்வருவன போன்ற பொதுவான கணக்காய்வு நடைமுறைகளை வழங்கியிருந்ததை அவதானிக்க முடிந்தது :

- விசாரணை
- பரிசீலனை
- மறுகணிப்பீடு
- அவதானிப்பு

**பகுதி (B)**

**(a)**

இந்த வினா, தொடர்ந்தியங்கும் எடுகோளின் அடிப்படையில் நிறுவனமொன்று தொடர்ந்து இயங்குவதற்கான அதன் ஆற்றலின் மீது கணிசமானளவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிதிசார் குறிகாட்டிகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. பல பரீட்சார்த்திகள் செயற்பாடு பற்றிக் குறிப்பிட்டிருந்ததுடன் நிதிக் குறிகாட்டிகளுக்குப் பதிலாக இறக்குமதி வழங்கல்களின் பற்றாக்குறை, நிலுவையிலுள்ள சட்ட வழக்குகள் போன்ற ஏனைய குறிகாட்டிகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)**

இந்த வினா, தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பான நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அடையாளம் காணப்படும்போது, கணக்காய்வாளர் ஆற்ற வேண்டிய கணக்காய்வு நடைமுறையைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. சில பரீட்சார்த்திகளால் சரியான விடை அளிக்க முடிந்திருந்த அதே வேளை அதிகளவான பரீட்சார்த்திகள் விசாரணை, அவதானிப்பு, பரிசீலனை போன்ற விடைகளை அளித்திருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை.***

\- - -

**<u>பரீட்சையில் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தை உயர்த்துவதற்கான பரிந்துரைகள்</u>:**

(1) பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தைப் படித்து, அதன் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

(2) இந்தப் பாடத்துடன் சம்பந்தப்பட்ட கட்டுரைகள், சஞ்சிகைகளை வாசிப்பதுடன் கணக்காய்வுடன் தொடர்புடைய வேறு விடயங்களையும் வாசித்தறிதல் வேண்டும்.

(3) பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணங்களை விளங்கிக் கொள்வதுடன், வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச் சொல் நிரலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பயிற்சி பெறுதலும் வேண்டும்.

(4) கடந்த கால வினாத்தாள்களின் உள்ளடக்கங்களைக் கற்பதுடன், குறைந்தது கடந்த 2 – 3 ஆண்டுகளின் நடைபெற்ற பரீட்சைகளின் வினாத்தாள்களைச் செய்து பார்த்து வினாக்கள் அமைக்கப்பட்டுள்ள விதம் பற்றி விளங்கிக்கொள்ள முயற்சித்தல் வேண்டும்.

(5) பரீட்சார்த்திகள் வினாத்தாள்களில் தரப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் பரீட்சையில் அதனைப் பிரயோகிப்பது பற்றிய பரீட்சகரின் எதிர்பார்ப்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புடைமையை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

(6) கடந்தகால வினாத்தாள்களில் பாடப் புத்தகத்திலுள்ள எந்தப் பகுதி பரீட்சிக்கப்பட்டுள்ளதோ அத்தகைய பகுதிகளை சிறு குறிப்புகளாக எழுதிக்கொண்டு படித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(7) பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்காக வழங்கப்பட்ட நேரத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த கால வினாக்களுக்கு விடையளித்துப் பயிற்சி எடுத்தல் வேண்டும். இது பரீட்சையின்போது நேர முகாமைத்துவத்தை மேம்படுத்த உதவும்.

(8) பாடப் புத்தகத்தில் தரப்பட்ட ஒவ்வொரு பாட அத்தியாயத்திலிருந்தும் சிறு குறிப்புகளை எழுதிக் கொள்வதுடன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாடத்திட்டத்தின் உள்ளடக்கங்களை நினைவில் வைத்திருப்பதற்காக அவற்றைப் படிக்கவும்.

(9) பரீட்சார்த்திகள் விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

(10) பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு முன், அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும்.

(11) பரீட்சார்த்திகள், வினாவை விளங்கிக்கொள்வதற்கும் வினாவில் கேட்கப்பட்டதற்கு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்குவதற்குமாக பரீட்சையின்போது தமது மனநிலையை தெளிவாகவும் சமநிலையாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

(12) பரீட்சார்த்திகள் வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு அவ்வினாவுக்கு விடையளிப்பதற்கான நேரத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதுடன், வினாத்தாளில் தரப்பட்ட சகல வினாக்களுக்கும் பயனுறுதிமிக்க வகையில் விடையளிப்பதற்கான இயலுமையுடன் இருத்தல் வேண்டும்.

(13) விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன், கேட்கப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கப்பட்டுள்ளதா, பொருத்தமானவாறு இலக்கமிடப்பட்டுள்ளதா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

- * * * -